## DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 227/2021 |
| Deposition of Witness for Prosecution | : P.W.7 (L.W.7) |
| Name | : Pratheep Kumar |
| Father Name | : Elangovan |
| Village | : Kalliyakavilai |
| Taluk | : Vilavancode |
| Calling | : Doctor |
| Religion | : Hindu |
| Caste | :- |
| Age | : 39 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2023

**எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை-**

நான் தற்போது குலசேகரம் மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன் இதற்கு முன்பு தக்கலை மருத்துவமனையில் 29.06.2021ம் தேதி மதியம் 12.40 மணியளவில் நான் பணியில் இருந்த போது மகேஸ்வரி என்பவரை அவரது சகோதரர் சிவன் என்பவர் சிகிட்சைக்காக அழைத்து வந்தார் . அவரை விசாரித்தபோது 29.06,2021ம் தேதி காலை 11.45 மணியளவில் இரண்டு தெரிந்த நபர்கள் செக்காலத்தெரு என்ற இடத்தில் வைத்து பிவிசி பைப்பை வைத்து தாக்கியதாக என்னிடம் தெரிவித்தார் அவருக்கு கீழ்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. வலது பக்க கை முட்டியில் 8 x 3 செ.மி அளவில் காயங்கள் காணப்பட்டது. இடது காதில் கம்மலை பிடித்த இழுத்தனால் அவருக்கு காதானது 3 செ.மீ அளவில் கிழந்திருந்தது. இடது பக்க முகம் மறறும் கண் அருகில் 8 x 3 செ.மீ அளவில் கன்றிய காயம் காணப்பட்டது. வலது பக்க காதில் ஒட்டையிலிருந்தது ரத்தம் வடிந்திரு'நதது வயிற்றில் குத்தியதாகவும் தெரிவித்தார் அதில் காயங்கள் ஏதும் காணப்படவில்லை. மேற்படி மகேஸ்வரி என்பவருக்கு ஏற்பட்ட 2 வது காயமானது

கொடுங்காயம் என்றும் மற்ற காயங்கள் சாதாரண காயம் என்று சான்று வழங்கினேன். இன்று நீதிமன்றத்தில் காண்ப்பிக்கப்படும் **விபத்து பதிவேட்டு காயச்சான்று அசாஆ 3 ஆகும்.** போலிசார் என்னை வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்கள்.

**குறுக்குவிசாரணை**

காயம்பட்ட மகேஸ்வரி உங்களிடம் பிரம்பால் மற்றும் பிவிசி பைப்பால் தாக்கியதாக கூறியுள்ளார் என்றால் சரிதான். நீங்கள் சொல்லியுள்ள 3 வது காயம் ஒரு நபர் கீழே விழும்போது கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரி தான். காயம்பட்ட நபர் என்னிடம் கல்லால் தாக்கியதாக சொல்லவிலலை என்றால் சரிதான்.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்துசெய்தும் ஒப்புக்கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,

பத்மநாபபுரம்

## DEPOSITION OF WITNESS

(Chapter XXII code of CRIMINAL Procedure)

## THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PADMANABHAPURAM

| | |
|---|---|
| Calender Case No. | : C.C. 227/2021 |
| Deposition of Witness for Prosecution | : P.W. 8 (L.W.9) |
| Name | : வல்சலம் |
| Father Name | : செல்லப்பன் |
| Village | : கருங்கல் |
| Taluk | : கிள்ளியூர் |
| Calling | : உதவி ஆய்வாளா் ஓய்வு |
| Religion | : கிறிஸ்டின் |
| Caste | :---- |
| Age | : 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.08.2023

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை-**

நான் கொற்றிக்கோடு காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக கடந்த 2021ம் வருடம் பணிபுரிந்தேன். கடந்த 29.06.2021 ம் ்தேதி 11.30 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் ஜார்ஜ் நிலைய பொறுப்பில் இருக்கும் போது வாதி மகேஸ்வரி நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகாரின் தன்மைப்படி கொற்றிக்கோடு காவல்நிலைய கு.எண். 318/2021 இதச பிரிவு 294 (பி),323,506(1) ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் அந்த முதல் தகவலறிக்கை அசாஆ 4 ஆகும். பின்னர் புகாரையும் முதல் தகவலறிக்யை நீதிமன்றத்திற்கு அனுப்பு வைத்துள்ளார். பின்னர் வழக்கு கோப்புகளை 29.06.2021 ம் தேதி என் வசம் ஒப்படைத்தார் நான் வழக்கு கோப்புகளை அன்றைய தினம் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 30.06.2021 ம் தேதி காலை 7.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு ஜோதி மற்றும் விஜுகுமார் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவர்களையும் சாட்சிகளாக விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் காயம்பட்ட நபரான மகேஸ்வரி , லதா ,சரஸ்வதி , சிவக்குமார் ஆகியோா்களை தனிதனியா விசாரித்து வாக்குமூலம் பதிவுக செய்தேன்

முதல் தகவலறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளார் ஜார்ஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் பிணையில் சென்றதால் நான் அவர்களை கைது செய்யவில்லை. பின்னர் நான் பணிமாறுதாலகி சென்று விட்ட காரணத்தினால் வழக்கு கோப்புகளை உதவி ஆய்வாளர் கதிரேசன் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

**குறுக்குவிசாரணை**

எதிரியின் வீட்டின் முன்புள்ள அடிபைப்பு அருகில் சம்பவம் நடைபெற்றதாக உங்களுடைய விசாரணையில் சாட்சி சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார்கள். புகாரிலும் எதிரியின் வீட்டின் முன்புதான் சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளார்கள். பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் அடிபம்பு அருகில் எதிரியின் வீடு காட்டப்படவில்லை என்றால் சரிதான். நீங்கள் பார்வைமகஜரில் காட்டியுள்ள இடம் சம்பவ இடம் இல்லை் என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரா் சொன்ன இடத்தில் நீங்கள் விசாரிக்கவில்லை என்றும் அதன்அடிப்படையில் பரா்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசா1 மகேஸ்வரி உங்களுடைய விசாரணையில் அடிபைப்பு கம்பியை பிடுங்கி தாக்கியதாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லவில்லை. பிவிசி பைப்பு என்று சொல்லியுள்ளார். அசா 1 மகேஸ்வரியை அசா 3 சரஸ்வதி மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக சொல்லியுள்ளார். காயச்சான்றிதழில் மகேஸ்வரியை சிகிட்சைக்கு அழைத்து வந்தது சிவன் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். புகார் மனுவில் கத்தியை காண்பித்து என்ற வாசகத்தை அடித்து விட்டு பைப்பை காண்பித்து என்று இருப்பது சரிதான். உங்களுடைய விசாரணையில் பிரம்பினால்தாக்கியதாக தெரியவந்ததால் என்றால் தெரியவரவில்லை பிளாஸ்டிக் பைப்பு என்று தான் தெரியவந்தது. நீங்கள் உண்மைக்கு புறம்பாக புகார்மனுவை பெற்று சாட்சிகளை சரியாக விசாரிக்காமல் சாட்சியம் அளிக்க வந்துள்ளீர் என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நடுவர் எண்.1,
பத்மநாபபுரம்